[2005 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 123, திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

123—

சிட்கோ தொழிற்பேட்டை

***51508—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் அங்களகுறிச்சி, ஆழியார் நகர் பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டையை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள அங்களகுறிச்சி, ஆழியார் நகர் பகுதிகள் விவசாயிகள் நிறைந்த பகுதி. இங்கு கூலித் தொழிலாளர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். இந்தப் பகுதிகளில் கடந்த நான்கு ஆண்டு காலமாக மழை பொய்த்து விட்டதால், விவசாயம் செய்ய முடியவில்லை. விவசாயிகளும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும் வேலையின்றி மிகவும் கஷ்டத்திலே இருக்கிறார்கள். இந்த அங்களகுறிச்சி, ஆழியார் நகர்ப் பகுதிகளில் சிட்கோ தொழிற்பேட்டை ஏற்படுத்தினால்—கயிறு திரிக்கும் தொழிற்சாலை, மரச்சாமான்கள் செய்யும் தொழிற்சாலை, கதர் கிராமத் தொழில்கள் மூலமாக சோப்பு, மெழுகுவர்த்தி, ஊதுபத்தி போன்றவை தயாரிக்கின்ற தொழிற்சாலை, பனைநார்ப் பொருட்கள் த்யாரிக்கின்ற தொழிற்சாலை போன்ற அனைத்துத் தொழிற்சாலைகளையும் தொடங்குவதற்கு ஏற்ற இடமாக இருப்பதால், இந்தப் பகுதியிலே படித்துவிட்டு வேலையில்லாத பட்டதாரிகள் அதிகமாக இருப்பதால், இந்த ஆழியார் நகர், அங்களகுறிச்சி பகுதிகளில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2005 மார்ச் 9]

முற்பகல் 10-20

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதி மலைப் பகுதி. அங்கே தொழிற்பேட்டை தொடங்கவேண்டுமென்பதில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீவிரமாக இருக்கின்றார்கள். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இருந்தாலும் கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியிலே அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவா என வருவாய்த் துறையினரை அணுகியபோது, சார்-ஆட்சியர், பொள்ளாச்சி அவர்கள், பொள்ளாச்சி, வால்பாறை, உடுமலைப்பேட்டை வட்டங்களில் தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தகுதியான அரசுப் புறம்போக்கு நிலங்கள் எதுவுமில்லை எனத் தெரிவித்துள்ளார்கள். எனவே, தகுதியான நிலங்கள், அரசு நிர்ணயிக்கும் சந்தை விலைக்குக் கிடைக்கும்பட்சத்தில் படித்த, தொழில் தொடங்க ஆர்வமுள்ள இளைஞர்கள் வரும்போது, தொழிற்பேட்டை அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழியார் நகர், அங்களகுறிச்சியைச் சுற்றிலும், பிளசின்னம்பாளையம், அங்களகுறிச்சி, கரியஞ்செட்டிபாளையம், கம்பலாபட்டி, அர்த்தநாரிபாளையம், ஜல்லிபட்டி, தென்சங்கம்பாளையம், சோமந்துறை, தென்சித்தூர், ரமணிமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், காளியாபுரம், கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் போன்ற கிராமங்களில் சுமார் ஒரு இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். இங்கே பொதுப் பணித் துறைக்கு அப்பாற்பட்டு உபயோகமற்ற இடங்களும் இருக்கின்றன. அதேபோல, தனியார்களும் இங்கே நிலம் வழங்குவதற்கு முன்வர இருக்கிறார்கள். அருகில் ஆழியார் அணையும் இருக்கிறது. அங்கே எல்லா வசதிகளும் இருப்பதால், படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் இதைப் பரிசீலனை செய்து ஆழியார் நகரிலும், அங்களகுறிச்சி பகுதியிலும் சிட்கோமூலம் தொழிற்பேட்டை அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே, ஏற்கெனவே 390 தொழிற்கூடங்கள், 141 மேம்படுத்தப்பட்ட மனைகள் சிட்கோ மூலமாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர், தனியார் நிலத்தை, தொழில் தொடங்குவதற்குத் தருவதாக இங்கே உறுதியளித்திருக்கிறார்கள். அரசு நிர்ணயிக்கக்கூடிய சந்தை விலைக்குத் தனியார் தருவதற்குத் தயாராக இருப்பார்களேயானால், மாவட்டத் தொழில் மையம் மூலமாகவோ அல்லது சிட்கோ மூலமாகவோ இதுகுறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 124, திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

124—

தாட்கோ கடனுதவி

***23030—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படும் கடனுதவிக்கு மானியத்தை அரசு வழங்கினாலும், கடன் தர மறுக்கின்ற வங்கிகளுக்கு கடனுதவித் திட்டத்தை அவசியம் செயல்படுத்த வேண்டும் என அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகளால் கடன் வழங்க மறுக்கப்படும் தகுதியுள்ள இனங்களில், அரசு அறிவுரைப்படி, மாவட்ட ஆட்சியர் முன்னோடி வங்கி மேலாளருடன் கலந்து பேசி தாட்கோ மானியத்துடன் வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் வழங்கப்பட்டு வரும் ஆதிதிராவிட ஏழை எளிய, வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள மக்கள் பயனடைகின்ற வகையிலும், பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்கின்ற வகையிலும், ஆதிதிராவிடர் நலத் துறைமூலம் வழங்கப்படும் தாட்கோ மானியக் கடனுதவித்